செ.வெ.எண். 30/மார்ச்                                                                                    தேதி : 13.03.2017

# தருமபுரி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார துறையின் சார்பில் குடிமராமத்து பணியினை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் பூமி பூஜை செய்து துவக்கி வைத்தார்.





தருமபுரி மாவட்டம், குப்பூர் ஊராட்சிக்குட்பட்ட குருமன் குட்டை ஏரியில் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார துறையின் சார்பில் குடிமராமத்து பணியினை மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் இன்று (13.03.2017) துவக்கி வைத்து தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஏரிகளை பழுதுபார்க்க முன்பு நடைமுறையில் இருந்த குடிமராமத்து திட்டத்தை மீண்டும் கொண்டு வரும் நோக்கத்துடன் முதல் கட்டமாக ரூ. 100/- கோடிக்கு பொதுவான நிர்வாக ஒப்புதல் அளித்து ஆணையிடப்பட்டது. இதில் 10% விவசாயிகளின் பங்களிப்பு அதாவது உடல் உழைப்பு / பொருட்களின் விலை அளித்தல் / சங்கத்திலிருந்து தொகையாக வழங்குதல் என்றும், மீதமுள்ள 90% அரசின் பங்களிப்பாகும்.

அதனைத் தொடர்ந்து அரசாணை நிலை எண். 54. (டபிள்யு-1) பொதுப்பணித்துறை நாள்:10.03.2017-ல் இந்த குடிமராமத்து திட்டத்தின்கீழ் நமது மாவட்டத்தில் உள்ள குப்பூர் குருமன்குட்டை ஏரியினை பழுதுபார்க்க ரூ. 7.30 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி ஏரியின் பாசனப் பரப்பு 6.88 ஹெக்டேர் (அ) 16.99 ஏக்கராகவும், கரையின் நீளம் 250 மீட்டராகவும், மதகுகளின் எண்ணிக்கை 1 எண்ணாகவும், மேலும் இத்திட்டத்தின்கீழ் ஏரியின் கரையிலும், நீர் தேங்கும் பரப்பிலும் வழங்கு வாய்க்காலிலும் உள்ள புல் பூண்டுகள், முட்புதர்கள் அகற்றுதல், ஏரிக் கரையின் மீது மழையினாலும், கால்நடைகளினாலும் ஏற்பட்டுள்ள குழிகளை நிரப்பி சரி செய்தல், ஏரியின் வழங்கு வாய்க்காலிலும், மிகுதி நீர் செல்லும் பகுதிகளிலும் படிந்துள்ள வண்டல் மண்ணை அகற்றுதல், மிகுதி நீர் செல்லும் பகுதியில் உள்ள ஏப்ரான் சீரமைத்தல், ஏரிக்கரையின் முன் பகுதியில் களைந்துள்ள அலைத்தாங்கி கற்களை பிரித்தெடுத்து மீண்டும் சரியாக பொருத்துதல், கால்வாயில் ஏற்கனவே கட்டப்பட்டு பழுதடைந்து சிறு பாலத்தை சீரமைத்தல் போன்ற பல்வேறு பணிகள் இந்த ஏரியில் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும் விவசாயிகள் விவசாய பயன்பாட்டிற்காக வண்டல்மண் குறிப்பிட்ட அளவு விவசாய பயன்பாட்டிற்காக மாவட்ட நிர்வாக ஒப்புதலுடன் பயன்படுத்திக்கொள்ளலாம் என மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஆர்.ஆர். முருகன், கோட்டாட்சியர் திரு. இராமமூர்த்தி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு. பாலசுப்ரமணியன், முன்னாள் பால்வளத் தலைவர் திரு. டி.கே.ராஜேந்திரன், முன்னாள்

நகரமன்ற தலைவர் திரு. எஸ்.ஆர். வெற்றிவேல், பாலக்கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் திரு.கே.வி. அரங்கநாதன், கூட்டுறவு நிறுவனங்களின் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத் தலைவர் திரு. எம். பழனிசாமி உட்பட துறை ரீதியான அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.